Judicial Form No.53

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, POCHAMPALLI.

Case No. : MC 9/2023

Witness for Prosecution :

| | | | |
|---|---|---|---|
| Name | : நந்தினி | Taluk | : |
| Father's / Husband Name | : ஞானசேகரன் | Calling | : |
| Village | : அரசம்பட்டி | Age | : 33 |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 03.09.2025.

எதிர்மனுதாரர் ஆஜர் இல்லை.

துவக்க நேரம்– 05.47 PM

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் M.Sc.,B.Ed படித்துள்ளேன். எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 06.02.2017 அன்று நடைபெற்றது. திருமண வாழ்க்கை எங்கு தொடங்கப்பட்டது என்றால் காஞ்சிபுரம். அங்கு எனது கணவர் பணிபுரிந்த காவலர் குடியிருப்பில் வசித்தோம் என்றால் சரிதான். எத்தனை நாட்கள் அங்கு தங்கியிருந்தேன் என்றால் 1 வருடம் தங்கி இருந்தோம், அதில்3 மாதங்கள் நான் அங்கு இருந்திருப்பேன். திருமணத்திற்கு பின்னிட்டு நாங்கள் நன்றாகத்தான் வாழ்ந்து வந்தோம் என்றால் 3 மாதங்கள் நன்றாக வாழ்ந்தோம். திருமணத்திற்கு ஆன செலவுகள் எதிர்மனுதாரர் தான் செய்தார் என்றால் சரிதான், பின்னிட்டு செலவுகளில் பாதி தரப்பட்டது. திருமணத்திற்கு பின்னிட்டு தாலிக்கொடி மற்றும் நகைகள் வாங்கிக்கொடுத்தார் என்றால் இல்லை, திருமணத்தின் போது மாங்கல்யம் மட்டும் வாங்கிக்கொடுத்தார். 15 பவுன் நகை திருமணத்தின் போது போட்டுவந்ததாக சொன்னதில் எந்த நகை என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். திருமணத்தின் போது நாங்கள் எதிர்மனுதாரருக்கு 5 பவுன் நகையை அனுவித்தோம். எதிர்மனுதாரர் திருமணத்திற்கு பின்னிட்டு 5 சவரன் தாலிக்கொடி இரண்டரை சவரன் கழுத்து செயின், 1 பவுன் ஜிமிக்கி எடுத்துக்கொடுத்தார் என்றால் நகை எதுவும் வாங்கித்தரவில்லை.

2. மேற்சொன்ன நகை என் வசம் தான் உள்ளது என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பின்னிட்டு 3 மாதங்கள் தான் நான் எதிர்மனுதாரருடன் வசித்தேன் என்றால், திருமணத்திற்கு பிறகு 1 மாதம் கழித்து தனியாக இருப்பதால் என் அம்மா வீட்டில் கொண்டு வந்து அவர் தான் விட்டார். அவ்வபோது என்னை அழைத்துக்கொண்டு காஞ்சிபுரத்துக்கு செல்வார், மீண்டும் கொண்டு வந்து அரசம்பட்டியில் விட்டுவிடுவார். எப்போது எதிர்மனுதாரருடன் வாழக்கூடாது என்று வந்தேன் என்றால், 5 வருடங்கள் ஆகிவிட்டது. 5 வருடத்தில் நான் அவருடன் சேர்ந்து வாழ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் தான் என்னுடன் சேர்ந்து வாழ என்னிடம் வந்து பேசினார் என்றால் இல்லை எதிர்மனுதாரர் மீது காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்த பின்பு வந்து பேசினார்.

3. காவல் கண்காணிப்பாளரிடம் புகார் எப்போது கொடுத்தேன் என்றால் 2015 ம் ஆண்டு கொடுத்தேன். அந்த புகாரில் சேர்ந்து வாழ சொல்லிக்கொடுக்கவில்லை, அவர் வேறு ஒருவருடன் சேர்ந்து இருக்கிறார் என்று புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அவ்வாறு புகார் எதுவும் நான் சொல்லும் காலகட்டத்தில் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. 2015 ம் ஆண்டு புகார் கொடுத்ததாக சொல்வதில் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன். தாக்கல் செய்தேன் என்று தவறாக சொல்கிறேன் எனறால் சரியல்ல. 2015 ஆண்டில் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் புகாருக்கு பின்னிட்டு எந்த புகாரும் என்னால் தரப்படவில்லை என்று சொன்னால் சரிதான். 2015 க்கு பின்னிட்டு புகார் கொடுத்ததாக சொன்னால் அது தவறான சங்கதி என்றால் சரிதான். எத்தனை குழந்தைகள் என்றால் ஒரு ஆண் குழந்தை. குழந்தை பிறந்த ஆண்டு எது என்றால் 13.10.2021. திருமணமாகி 4 ஆண்டுகள் கழித்து குழந்தை பிறந்தது என்றால் சரிதான். நான் திருமணமாகி 6 மாதங்களில் பிரிந்து வந்த பின்பு எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ வேண்டும் என்று முயற்சி செய்ததன் காரணமாக சேர்ந்து வாழ்ந்ததில் குழந்தை பிறந்தது என்றால் சரிதான். என் குழந்தைக்கு முடி எடுத்து, காது குத்தும் நிகழ்ச்சியை எனது கணவர் தான் முன்னின்று ஏற்பாடு செய்தார் என்றால் சரிதான், அதற்கு பின்னிட்டு அதற்கான பணத்தை வாங்கி சென்று விட்டார். (சாட்சி தற்போது புகார் காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்த ஆண்டு 2023 என்று கூறுகிறார்.)

4. அவ்வாறு 2023 ம் ஆண்டு எதிர்மனுதாரரின் மீது புகார் எதுவும்

கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. 2023ம் ஆண்டு கொடுத்த புகாரின் நகல் தான் நீதிமன்றத்தில் கொடுத்திருக்க முடியும் என்றால், ஆம் அசல் காவல் கண்காணிப்பாளரிடம் உள்ளது. ம.சா.ஆ.7 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் என்றால் சரிதான். அதில் கையொப்பம் நான் செய்தது தான். அந்த ஆவணம் நகல் அல்ல என்று சொன்னால் சரிதான். மனுவிற்காக தயார் செய்த ஆவணம், மோசடியான ஆவணம் என்றால் சரியல்ல. காதுகுத்தும் நிகழ்ச்சிக்கு அன்பளிப்பாக வந்த நகை என்னிடம் தான் உள்ளது என்றால் பணமும், நகையும் எதிர்மனுதாரர் வாங்கி சென்றுவிட்டார். என் கணவர் அப்போது எவ்வளவு நகை செய்தார் என்றால், நகை எதுவும் செய்யவில்லை. திருமணத்தின் போது எனக்கு சம்மந்தப்பட்ட நகைகள் என்னிடம் தான் உள்ளது என்றால் பாதி என்னிடம் உள்ளது, மீதி பாதி நகைகள் எதிர்மனுதாரர் எடுத்துச்சென்றுவிட்டார். இவ்வழக்கு மனுவிலும் மேற்படி சங்கதியை குறிப்பிட்டுதான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான். அவ்வாறு பாதி நகைகள் என்னிடமும், பாதி நகைகள் அவரிடம் இருப்பதாக சொல்லப்படும் சங்கதிக்கு முரணாக எதுவும் சொல்லப்பட்டிருந்தால் அது தவறான சங்கதி என்றால் சரிதான்.

5. நான் பிரிந்து வந்த பின்பும் எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ பல முறை முயற்சி செய்தார் என்றால் ஒரு முறை முயற்சி செய்தார். அந்த ஒரு முறை எப்போது என்றால் குழந்தை பிறந்துது முதல் பிறந்தநாளில் வந்தார். எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ பல முறை முயற்சி செய்ததன் அடிப்படையில் தான் குழந்தை பிறந்தது என்றால் சரிதான். 6 மாதத்திற்கு பின்னிட்டு எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ எனக்கு விருப்பம் இல்லை என்றால், ஆம் எனக்கு விருப்பம் இல்லை, எதிர்மனுதாரர் பல பெண்களுடன் தொடர்பில் இருப்பது தெரிந்ததால் சேர்ந்து வாழ விருப்பமில்லை. 2021க்கு பின்னிட்டுத்தான் எதிர்மனுதாரர் பலருடன் தொடர்பில் இருப்பது தெரியவந்ததாக கூறியுள்ளேன் என்றால் எனக்கு அப்போது தான் தெரிய வந்தது, அதற்கு முன்பு சந்தேகம் அடைந்து கேள்வி கேட்டபோது இல்லை என்று சமாதானம் செய்துவிட்டார்கள். எனது புகாரில் மேற்கண்ட விவரத்தை கூறியுள்ளேனா என்றால் இல்லை.

6. மனுவிற்கும், சாட்சியமும் முரண்பட்டுள்ளதால் சாட்சியமும், மனுவும் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தற்போதும் சேர்ந்து வாழ விருப்பமுடன் உள்ளார், நான் தான் அவருடன் சேர்ந்து வாழ விருப்பமில்லாமல் உள்ளேன் என்றால், அவர் வேறு ஒருவருடன் தொடர்பில் இருக்கும் சமயத்தில் நான் எவ்வாறு சேர்ந்து வாழ இயலும். குழந்தை பிறந்த பின்னிட்டும், அவரை

அப்பா என்று சொல்லி சேர்ந்து வாழ முயற்சி செய்யவில்லை என்றால், அவ்வாறு தவறு செய்யும் நபருடன் எப்படி குழந்தையுடன் வாழ்வது. எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ்வதற்காக சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான் நான் பராமரிப்பு வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு மனு செய்துள்ளார். ஒவ்வொரு மாதமும் குழந்தை மற்றும் என்னுடைய பெயரில் காப்பீடு ஒன்று எதிர்மனுதாரர் செலுத்தி வருகிறார் என்றால் அதன் விவரம் எனக்கு தெரியாது. என் மேல் உள்ள அக்கறையில் தான் மேற்படி காப்பீட்டை கட்டி வருகறார் என்றாலும், குழந்தைக்கு தேவையான அடிப்படை தேவைகளையும் செய்து வருகிறார் என்றாலும் சரியல்ல.

7. எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ சொல்லி தற்போது வரை பதில மனு தாக்ல செய்யவில்லை என்றால் சரிதான். அதில் சமரசம் செய்வதற்கான அழைப்பாணை வந்தது என்றால் சரிதான். அந்த அறிவிப்பின் பேரில் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்றால் சரிதான். நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பம் இருந்தால் சமரசமாக செல்ல முயற்சி செய்திருப்பேன் என்றால் சரியல்ல. மாற்று கோரிக்கை எதுவும் இருந்தால் சொல்லியிருப்பேன், அவருடன் வாழவே கூடாது என்று முடிவெடுத்ததால் தான் செல்லவில்லை என்றால், பல முறை பேசிப்பார்த்தும் எதிர்மனுதாரர் தனது குணத்தை மாற்றிக்கொள்ளவில்லை. எதிர்மனுதாரர் யாருடனுடம் தவறான தொடர்பில் இல்லை என்றால் சரியல்ல.

**( குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)**

முடிவு நேரம் 06.53 PM.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct".

Sd/- Saravanan
District Munsif Cum Judicial
Magistrate, Pochampalli (FAC)